[10th March 1961

SRI K. R. NALLASIVAM: காவேரி கடைக்கோடியில் தண்ணீர் வீணாகப் போவதாக கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார். காவேரிக்கு மேல் பகுதிகள், சேலம் ஜில்லா போன்ற பகுதிகளில் உள்ள விவசாயிகள் பம்ப்செட்கள் மூலம் அதிகப்படி தண்ணீரை எடுத்துக் கொள்வதற்கு வேண்டிய வசதி செய்து கொடுப்பது பற்றி சர்க்கார் யோசனை செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை.

SRI V. SUBBIAH: ரிவர் பம்பிங் ஸிஸ்டம் எந்தெந்த ஜில்லாக்களில் எவ்வளவு பம்ப்கள் இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கிறது? எந்தளவு அவை வெற்றிகரமான முறையில் நடந்து கொண்டிருக்கின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ராமநாதபுரம் ஜில்லாவில் இளையான்குடி, பெட்டுச்செட்டிப்பட்டி, சொர்ணம் பட்டி கோவிந்தநல்லூர், கிராமங்களில் இப்பொழுது எடுத்துக் கொள்வதாக உத்தேசம். திருநெல்வேலி ஜில்லாவில், மேல் ஆத்தூர், கல்லிக்குளம் இவைகளில் எடுத்துக் கொள்வதாக உத்தேசம். இவை விவசாய இலாகாவால் நிறைவேற்றப்படும்.

MR. SPEAKER: அடுத்த இரண்டு கேள்விகளையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம்.

Beedi Factories Act

* 738 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

பீடித் தொழிற்சாலை சட்டத்தின் 2 (g) [i] பிரிவு செல்லத்தக்கதல்ல என்று சென்னை ஐகோர்ட்டு தீர்ப்பளித்துள்ளதால் பீடித் தொழிலின் ட்ரேட் மார்க் முதலாளிகள் சட்டத்திலிருந்து தப்பிக்க வழி ஏற்பட்டுள்ளதால் அச்சட்டத்தின் 2 (g) பிரிவுக்கு திருத்தம் கொண்டுவர உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: The matter is under consideration.

* 739 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடஆற்காடு ஜில்லா பீடித் தொழிலாளர் சங்கத்திலிருந்து மாதிரி திருத்தங்களைப் பற்றி 1960-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் தேதி, 1960-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ம் தேதிகளில் சர்க்காருக்கு விண்ணப்பங்கள் ஏதேனும் வந்துள்ளனவா?

(இ) அவைகளின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

10th March 1961]

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) The matter is under consideration.

SRI V. K. KOTHANDARAMAN: *1944-ம் ஆண்டு மத்திய சர்க்கார் எக்ஸைஸ் சட்ட விதிப்படி புகையிலைக்கு கொடுக்கக் கூடிய எல் 2, எல் 5, லைசென்ஸ் வாங்கி ட்ரேட்மார்க் முதலாளிகள் நம் சர்க்கார் பீடித்தொழிலாளர்களுக்காக வேண்டி வகுத்திருக்கக் கூடிய சட்டத்தை தகர்த்தெறியக்கூடிய நிலைமையிருக்கிறபடியால், நம் சர்க்காரை அனுசரியாமல் புகையிலை லைசென்ஸ் கொடுக்கக் கூடாது என்று மத்திய சர்க்காரை வற்புறுத்தியிருக்கிறார்களா? அதற்கு என்ன பதில் வந்துள்ளது?*

THE HON. SRI R. VENKATARAMAN: *இதுப்பற்றி மத்திய சர்க்காருக்கு எழுதியதில் அவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. எல் 2 லைசென்ஸ் கொடுப்பது வேறு, லேபர் சட்டங்களை நிறைவேற்றுவது வேறு என்று சொல்லி விட்டார்கள்.*

SRI V. K. KOTHANDARAMAN: *குறைந்தபட்ச கூலி 1-11 அணு, 1-12 அணு என்று அமுலில் இருந்தும்கூட இன்று 1-6, 1-8-க்கு மேலே பலயிடங்களில் கொடுக்காத ஒரு நிலை இருப்பதாக அமைச்சர் அவர்களிடம் புகார் செய்யப்பட்டிருக்கிறதா? அது விஷயமாக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது?*

THE HON. SRI R. VENKATARAMAN: *லேபர் கமிஷனர் இருக்கிறார்கள், லேபர் ஆபீஸர்கள் இருக்கிறார்கள். ஆகவே இதை சட்டசபையில் வந்து சொல்லவேண்டிய அவசியமேயில்லை.*

Polytechnic (Guindy)

*** 740 Q.—SRI A. VEDARATHNAM:** *கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) கிண்டியில் உள்ள பாலிடெக்னிக்கிற்கு புதுக்கட்டிடம் அமைக்கத் திட்டமுண்டா?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes Sir.

(b) As there is no scope for putting up additional buildings to provide for workshops, laboratories, hostels, main instructional buildings, playgrounds, etc., at Guindy, it has been decided to hand over the existing building to the Industries Department and to acquire about 100 acres of land in Kalikundram and Pallipattu villages, adjacent to the Indian Institute of Technology, Guindy and to construct buildings in the newly acquired site for the Polytechnic, hostels etc.

SRI A. VEDARATHNAM: *இப்பொழுது இந்த பாலிடெக்னிக்கில் எவ்வளவு மாணவர்கள் படிக்கிறார்கள். அந்த மாணவர்களுக்கு இடம் பற்றாக்குறை இருக்கிறதா? அல்லது புதிய தொழில் துறை போதனை முறையை ஆரம்பித்திருக்கிறார்களா?*